**கவனிக்க** .- *22.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1839 - 2013 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2013.11.29

*1839 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 200 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2013, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## 1998 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை உள்ளக வடிவமைப்பாளர்கள் (கூட்டிணைத்தல்) நிறுவன சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்

பாராளுமன்ற உறுப்பினர், ஜோன் அமரதுங்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''1998 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை உள்ளக வடிவமைப்பாளர்கள் (கூட்டிணைத்தல்) நிறுவன சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்துள்ளேன். கீழ் வருவனவைகள் உள்ளடங்கலாக இணைப்பின் பொதுவான அதிகாரங்களுக்கு உட்பட்ட சட்டமூலத்தின் 4 ஆவது பிரிவில் திருத்தங்களை மேற்கொள்வதே இந்த சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(1) உள்ளக வடிவமைப்புத் துறையில் உள்ள தொழில் நடத்துனர்கள் இந்த கூட்டுத்தாபனத்தில் அங்கத்துவம் பெற்றிருத்தல் ஒரு தேவைப்பாடாகும். இவை உள்ளக வடிவமைப்பு மற்றும் தொழிற்சார் அந்தஸ்தினை அங்கீகரித்தல் ஆகியவற்றிற்கு பொருந்தும். நன்னெறி சார்ந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க மற்றும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல், கூட்டுத்தாபனத்தில் இதற்கான அனுமதியைப் பெற்று, உள்ளக வடிவமைப் பாளர்கள், உள்ளக கட்டிடக் கலைஞர்கள், உள்ளக தொழில்நுட்பவியலாளர் மற்றும் அலங்கரிப்பாளர்கள் ஆகியோர்கள் தங்களின் தொழில்களை நடாத்துவதற்கு ஏதுவாக உரிமத்தை பெறுவதற்கான தகைமையைப் பெறுவர்.

(2) உள்ளக வடிவமைப்பில் நிபுணத்துவம் பெற்றோருக்கும் இப்பேர்ப்பட்ட அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு தகைமையானோருக்கும் பட்டய அந்தஸ்து (பட்டய உள்ளக வடிவமைப்பாளர்) வழங்குவதற்கு இந்த கூட்டுத்தாபனம் ஒரு பொறுப்புள்ள அமைப்பாக அமையும் ;

(3) நல்ல வடிவமைப்பாளர் பெறுமதி மற்றும் உற்பத்தி தரத்தினைக் கொண்டதான உள்ளக உற்பத்திகளின் சந்தை நிலைவர ஏற்கைக்கு ஒரு தர உத்தரவாத சான்றிதழை இந்த கூட்டுத்தாபனம் வழங்கும் ;

(4) உள்ளக அலங்கரிப்பு மற்றும் உள்ளக தொழில்நுட்பவியல் துறைகளில் தொழில்நுட்ப திறன்களில் செயற்திறமைக்கான சான்றிதழ்களை வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்தின் பரிந்துரைகள் தேவைப்பாடாகும் ;

(5) உள்ளக வடிவமைப்பு கல்வித்துறையில் உச்ச நியமங்களை நிறுவுவதற்காக பாடத்தொகுதி அபிவிருத்திக்கு இந்த கூட்டுத்தாபனமானது, உதவிகளை மேற்கொள்ளும்.

ஜோன் அமரதுங்க,
பாராளுமன்ற உறுப்பினர்,
கம்பஹா மாவட்டம்.

11-977

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.